# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.வெங்கடேசன் | அ.சா.12 | LW.11 |
| Father's Name | : மண்ணாங்கட்டி | | |
| Village | : பட்டனம் கிராமம் | | |
| Taluk | : திண்டிவனம் தாலுக்கா | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : 35 | | |
| Time | : 11.25 am – 11.30 am | | |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 10th day December 2021.
10.12.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். ஜனவரி 1ம் தேதி நான் செஞ்சி ரோட்டில் இருந்த கடையில் நான் பெயிண்ட்டிங் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது போலீசார் என்னிடம் வந்து ஒரு பெண்ணின் சடலம் இருப்பதுபோல் போட்டோவை காண்பித்து, மஞ்சள் சிவப்பும் கலந்தமாதிரி உள்ள புடவை பிரேதத்தின்மீது இருப்பதுபோல் போட்டோவை காண்பித்து இந்த பெண் காணாமல் போய்விட்டது. உங்கள் ஊரில் யாராவது இந்த மாதிரி பெண் காணாமல் போய் இருக்கிறாரா என்று என்னிடம் விசாரணை செய்தார்கள். நான் பிரேதத்தை போய் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை</u>

சரிதான். தற்போது முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலீசார் விசாரிக்கும்போது சொன்னேன். நான் செஞ்சி ரோட்டில் இருந்த ஒரு கடையில் நான் வேலை செய்துகொண்டிருநதேன். அன்றைய தினத்தில் அந்த கடையில் வேலை செய்துகொண்டிருந்தேன் அப்போது ரோஷனை காவல்நிலையத்திலிருந்து வந்து விசாரணை செய்தார்கள். என்னை விசாரிக்கும்போது மதியம் 2.30 மணியிலிருந்து 3 மணிக்குள் இருக்கும். போலீசார் கேட்டுக்கொண்டதால் அவர்க ளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | |
|---|---|
| Name | :திரு.முனியப்பன் அ.சா.13 LW.13 |
| Father's Name | : ராதாகிருஷ்ணன் |
| Village | : No.88.செஞ்சி ரோடு வீதி, சந்தைமேடு |
| Taluk | : திண்டிவனம் தாலுக்கா |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 38 |
| Time | : 11.33 am – 11.42 am |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 10th day December 2021.
10.12.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். 11.1.2017ம் தேதி ஒரு வெள்ளை கார் செஞ்சிபக்கமாக இருந்து வந்தது. மெதுவாக வந்தது, நான் வழிதான்கேட்க வருகிறார்களோ என்று நான் வெளியில் வருவதற்குள்ளே வந்தவாசி பக்கமாக போய்விட்டது. அந்த கார் நம்பரை நான் பார்க்கவில்லை. அது வெள்ளை கலர் கார். கார் வந்தபோது மாலை நேரம், சுமார் 4 மணிக்கு மேல் இருக்கும். 10, 15 நாடகள் கழித்து என் ஹோட்டலுக்கு சாப்பிட வந்தவர்கள் வந்து சொன்னார்கள். அழுகிய நிலையில் ஒரு பிரேதம் பட்டனம் ஏரிக்கிட்ட கிடப்பதாக சொன்னார்கள். காவல் துறையினர் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். எந்த



தேதியில், எத்தனை மணிக்கு வந்து விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை. போலீசார் என்னை விசாரிக்கும்போது, அந்த கார் செஞ்சி பக்கமாக இருந்து வந்தது. நான் வெளியில் வருவதற்குள் வந்தவாசி மார்கமாக காரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். போலீஸ் விசாரணையிலும், செஞ்சி மார்க்கமாக வந்து வந்தவாசி மார்க்கமாக போனது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் காரை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திண்டிவனம், செஞ்சி மார்க்மாக நிறைய வண்டிகள் வந்துபோகும் அதனால் நான் எந்த வண்டியையும் கவனிக்க முடியாது என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

Name :திரு.கமலக்கண்ணன் அ.சா. 14 LW.17

Father's Name : வேணு

Village : மேல்பாக்கம் கிராமம்

Taluk : திண்டிவனம் தாலுக்கா

Caste :

Calling :

Religion :

Age : 57

Time : 11.42 am -

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 10th day December 2021.
10.12.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்கிறேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் எதுவும் கேள்விப்படவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய</u>

<u>அனுமதி கோரி அனுமதிவழங்கப்பட்டது.</u>

/2/

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், அந்த விசாரணையில், 21.1.2017ம் தேதி ஆரஞ்சுகலர் புடவை கட்டியிருந்த ஒரு பெண்ணின் சடலம் இருப்பதுபோல் ஒரு போட்டோ மற்றும் வால்போஸ்டரை காண்பித்து யாராவது இதுபோல் உங்கள் ஊரில் காணாமல் போய் இருக்கிறார்களா என்று போலீசார் என்னிடம் கேட்டார்கள் என்றால் தெரியாது.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை - இல்லை.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

Name :திரு.அண்ணாமலை அ.சா.15 LW.18

Father's Name :

Village : பெருமாள்கோவில் தெரு, ஊரல் கிராமம்

Taluk : திண்டிவனம்

Caste :

Calling :

Religion :

Age : 47

Time : 11.46 am – 11.49 am

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 10th day December 2021.
10.12.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பெயிண்ட்டிங் வேலை செய்து 4 வருடம் ஆகிறது. இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிவழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், அந்த விசாரணையில், 21.1.2017ம்



தேதி ஆரஞ்சுகலர் புடவை கட்டியிருந்த ஒரு பெண்ணின் சடலம் இருப்பதுபோல் ஒரு போட்டோ மற்றும் வால்போஸ்டரை காண்பித்து அடையாளம் கேட்டார்கள் என்றும், இந்த போட்டோவில் இருப்பதுபோல் யாராவது உங்கள் ஊரில் காணாமல் போய் இருக்கிறார்களா என்று போலீசார் என்னிடம் கேட்டார்கள் என்றால் தெரியாது.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை - இல்லை.